**JAMAL MOHAMED COLLEGE(Autonomous)**
**TIRUCHIRAPPALLI 620 020**

**Department of Visual Communication**
**B.Sc., Visual Communication**

<u>பத்திரிக்கை சுதந்திரம்</u>: (Media Laws and Ethics) Part -5

# பத்திரிக்கை சுதந்திரம்

# Freedom of the press

கட்டுரை எழுத்துக்கள் :லினிஸ் ரகுநாத் (LINIS RAGUNATH)
முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்
Dr. Ragunathan, Assistant Professor




**பத்திரிக்கை சுதந்திரம்:**

பத்திரிகை நிறுவனங்கள், அல்லது ஊடக நிறுவனங்கள் செய்திகளை, கருத்துக்களை சுதந்திரமாக எவ்வித அச்சுறுத்தல்களும் தடைகளுமின்றி உள்ளதை உள்ளபடி மக்களுக்கு வெளியிடுவதை பத்திரிகை சுதந்திரம் என்று அழைக்கப்படுகின்றது.

மேலும் ஊடக சுதந்திரம் என்பது ஊடகங்கள் மிரட்டலும் தணிக்கையும் இல்லாமல் தகவலை வெளியிடுவதற்கான சுதந்திரம் ஆகும்.

பலரும் வெவ்வேறு பொருளில் ‘**பத்திரிக்கை சுதந்திரம்**’ என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின்றனர் சிலர் எந்த வகையான சட்டத்தையோ கட்டுப்பாடோ இல்லாமல் எதனையும் அச்சிட்டு வெளியிடும் சுதந்திரத்தைக் குறிப்பிடுகின்றனர்.

- ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று வர்ணிக்கப்படும் பத்திரிக்கை சுதந்திரமாக செயல்படலாம்.

**நான்கு தூண்கள்**

1. சட்டமன்றம்
2. நிர்வாகம்
3. நீதிமன்றம்
4. ஊடகம்

ஆகியவை மக்களாட்சியின் நான்கு தூண்களாக கருதப்பட்டுகின்றன. அதன் நீட்சியாக சுதந்திரம் ஊடகம் சமூகத்தின் முக்கிய அங்கமாக கருதப்படுகிறது.

**'மனித உரிமைகள் சாசனம்' பகுதி 19**

'மனித உரிமைகள் சாசனம்' பகுதி 19 இல் இடம்பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசுகளுக்கு நினைவூட்டவும் ஐக்கிய நாடுகள் அவையினால் சிறப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**மே 3 ஆம் நாளன்று பத்திரிகை சுதந்திர நாள்**

இந்நாள் பத்திரிகை சுதந்திரத்தைப் பரப்பும் நோக்கிலும் 'மனித உரிமைகள் சாசனம்' பகுதி 19 இல் இடம்பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசுகளுக்கு நினைவூட்டவும் ஐக்கிய நாடுகள் அவையினால் சிறப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 1993 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வோர் ஆண்டும் மே 3 ஆம் நாளன்று பத்திரிகை சுதந்திர நாளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கொண்டாடப்படுகின்றது.

**ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் பத்திரிக்கைகளை ஒடுக்கும் பணி**

இந்தியாவில் முதன் முதலில் பத்திரிக்கைகளை ஒடுக்கும் பணியில் ஈடுபட்டது ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கவர்னர் ஜெனரலாக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ். இவர் 1781 ஆம் ஆண்டு இவர் ‘வங்காள் கெஜட்’ என்ற பத்திரிக்கைக்கு தொல்லை கொடுத்து, அதன் ஆசிரியரைக் கைது செய்து சிறையில் அடைத்தார். இதே போல் பல்வேறு கட்டுபாடுகை விதித்திருந்தார். 1818-ல் ஹேஸ்டிங்ஸ் பிரபு, பத்திரிக்கைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த

கடுமையான விதிமுறையை சிறிது தளர்த்தினார். ஆனாலும் பத்திரிக்கைக்கான முழு சுதந்திரம் கிடைக்காமல் இருந்து வந்தது.

பின்னர் 1975-ம் ஆண்டு நெருக்கடி காலப் பிரகடனத்தின் போது வெளியான ஆட்சேபணைக்கு உரிய விவகாரங்களை வெளியிடுவதைத் தடை செய்யும் சட்டம் 1977-ம் ஆண்டு நீக்கப்பட்டது. 1984-ம் ஆண்டு உரிமைப் பதிவுத் திருத்தச் சட்டமும், அவதூறு சட்டமும் அமல்படுத்தப்பட்டன. தற்போது பத்திரிக்கைச் சுதந்திரத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ வரைமுறைப்படுத்தும் மத்திய அரசின் பத்திரிக்கைச் சட்டம் எதுவும் இல்லை என்றாலும் சில சமயங்களில் தேவையில்லாமல் பத்திரிக்கைகள் மீது வழக்கு போடுவது நடக்கத்தான் செய்கிறது.

மேலும் கட்டுரைகள் செய்தித்தாள்களின் வழியே சென்று படியுங்கள் இன்றைய பத்திரிகை சுதந்திரத்தை நிலை புரியும்

**கட்டுரை எழுத்துக்கள் :லினிஸ் ரகுநாத் (LINIS RAGUNATH)**
முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்
Dr. Ragunathan, Assistant Professor

மின் செய்தித்தாள் இணைப்பு :

https://www.dinamani.com/editorial-articles/special-stories/2017/jun/13/do-journalists-have-basic-rights-2719831.html

Posted 17th July 2020 by LinisRagunath (லினிஸ் ரகுநாத்)
Labels: STUDY MATERIAL